**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No.373/2023</u>**

**<u>வழக்கு சாட்சி PW–10</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மருத்துவர்.ராமர் | தாலுகா | : | கடையநல்லூர் |
| தந்தை பெயர் | : | காளியப்பன் | தொழில் | : | மருத்துவர் |
| கிராமம் | : | கடையநல்லூர் | வயது | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of August 21st, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது தென்காசி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். 28.12.2022 அன்று இரவு 09.00 மணிக்கு நான் பணியில் இருக்கும் போது, இலஞ்சி வடக்கத்தியம்மன்கோவில் தெரு, மாடசாமி செட்டியார் மகன் மாரியப்பன் என்பவர் அடையாளம் தெரிந்த ஒரு நபரால் இலஞ்சி ஜங்சன் அருகே இரவு 08.45 மணிக்கு தாக்கப்பட்டு காயம் ஏற்பட்டதாக கூறினார். அவரை நான் பரிசோதனை செய்தபோது அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது.

(1). கூர்மையான குத்துக்காயம் மார்பு பகுதியில் 2 x 0.5 x 3 cm அளவில் இருந்தது.

(2). முதுகு பகுதியில் மேற்குறிப்பிட்டவாறு குத்துக்காயம் இருந்தது.

(3).வலது கை பெருவிரலின் முன்பகுதி தோல் பகுதியில் 3 x 1 cm அளவில் வெட்டுக்காயம் இருந்தது.

அவரை உள்நோயாளியாக சிகிச்சை அளித்து 02.01.2023 அன்று விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் எனச் சான்று வழங்கினேன். அந்த காயச்சான்று **அ.சா.ஆ.4** ஆகும். மருத்துவ விடுப்பு அறிக்கை எடுத்து வந்துள்ளேன். அது **சா.சா.ஆ.1** ஆகும். ஒரு நபரை கத்தியால் குத்தும் போது நான் பார்த்த காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

காயம்பட்டவர் புரோட்டா கடையில் வைத்து தாக்கப்பட்டதாக கூறவில்லை. நான் புரோட்டா கடையில் வைத்து தாக்கப்பட்டதாக என்னிடம் கூறியதாக போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். காவல்நிலையத்தில் தகவல் தெரிவிக்கப்பட்டதாக நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். யார் தன்னை தாக்கினார்கள் என்று பெயர் குறிப்பிட்டு என்னிடம் கூறவில்லை. காயம்பட்டவரை அவசர சிகிச்சை பிரிவில் அனுமதித்து தான் வைத்தியம் செய்தோம். நான் இவ்வாறு தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். உடைந்து போன கண்ணாடித்துண்டுகளில் வேகமாக தள்ளி கீழே விழும் போது நான் பார்த்த காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா? என்றால் முதுகு பகுதியிலோ, மார்பு பகுதியிலோ ஒரு பக்கம் மட்டும் தான் ஏற்பட வாய்ப்புள்ளது. முன்பக்கமாக விழுந்தவர் எழும்பி, பின்பக்கமாக விழும்போது நான் பார்த்த காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆய்வாளர் என்னை விசாரிக்கும்போது, ஆயுதத்தை காண்பித்து என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.21 19:43:57 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.373/2023**
**வழக்கு சாட்சி PW–11**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலமுருகன் | தாலுகா | : | சங்கரன்கோவில் |
| தந்தை பெயர் | : | சுப்பையா | தொழில் | : | ஆய்வாளர் |
| கிராமம் | : | சங்கரன்கோவில் | வயது | : | 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of August 21st, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது சங்கரன்கோவில் நகர காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.12.2022 ம் தேதியன்று தென்காசி காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்த போது, குற்றாலம் காவல்நிலைய காவல் ஆய்வாளர் விடுப்பில் இருந்தபோது, குற்றாலம் காவல்நிலையத்தில் பொறுப்பு அதிகாரியாக இருந்து வந்தேன். 28.12.2022 ம் தேதி, தென்காசி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் குற்றாலம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் வெள்ளத்துரை என்பவர் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த மாரியப்பன் என்பவரிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் குற்றால காவல்நிலைய குற்ற எண்.434/2022, சட்டப்பிரிவுகள் 294(பி), 324, 307, 506(2) இதசவின் படி வழக்கு பதிவு செய்து, என்னுடைய விசாரணைக்கு வைத்ததை நான் 29.12.2022 ம்

தேதி, அதிகாலை 01.00 மணிக்கு வழக்கு விசாரணையை எடுத்துக்கொண்டு, வழக்கின் சம்பவயிடம் சென்று பார்வையிட்டு, சாட்சிகள் மசூது அலி மற்றும் இனயத்துல்லா ஆகியோர் முன்னிலையில் ஒரு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.5 ஆகும்.**

பின்பு, மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த மாரியப்பன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவத்தின் போது சாட்சி பயன்படுத்திய இரத்தக்கறை படிந்த நீலம் மற்றும் சிவப்பு கலர் கலந்த முதுகு பகுதி கிழிந்த நிலையில் இருந்த அரைக்கை சட்டை ஒன்று, இரத்தக்கறை படிந்த நீலம், வெள்ளை கலர் கட்டம் போட்ட சாரம் ஒன்று ஆகியவற்றை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன்.

பின்னர், சாட்சிகள் முகமது இப்ராஹிம், முகமது அபுபக்கர் சித்திக், சாகுல் ஹமீது ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர், 29.12.2022 ம் தேதி, பகல் 02.00 மணிக்கு வழக்கின் எதிரியை இலஞ்சி டி.டி.டி.ஏ ஆசிரியர் பயிற்சி பக்கம் வைத்து கைது செய்து, சாட்சிகள் கிட்டு மற்றும் எஸ்.வி.பி.வி பாண்டியன் ஆகியோர் முன்னிலையில் விசாரிக்க எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். அவர் சம்பவத்திற்கு பயன்படுத்திய ஆயுதத்தை தான் இடுப்பு சாரத்திலிருந்து ஆஜர்படுத்துவதாக கூறினார். அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவர் இடுப்பு சாரத்திலிருந்து எடுத்து ஆஜர் படுத்திய கத்தியை நான் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன்.

ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.6 ஆகும்.** அத்தாட்சி **அ.சா.ஆ.7 ஆகும்.** (கத்தி சா.பொ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.).

எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். கைப்பற்றப்பட்ட பொருட்களை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 (2 எண்ணிக்கை) **அ.சா.ஆ.8** ஆகும்.

உதவி ஆய்வாளர் வெள்ளத்துரை என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர், குற்றாலம் ஆய்வாளர் ராஜேஷ்கண்ணன் பணிக்கு திரும்பியபடியால் வழக்கு விசாரணை கோப்புகளை அவரிடம் ஒப்படைத்தேன். அவர் தற்போது உடல்நிலை சரியில்லாமல் நீண்ட விடுப்பில் இருந்து வருகிறார். அவரோடு நான் பணிபுரிந்துள்ளதால் அவரின் கையெழுத்துக்கள் எனக்கு பரிட்சயமானவை. வழக்கில் அவர் பதிவு செய்து வைத்திருக்கும் ஆவணங்களைப் பார்த்து அவர்களுக்காக என்னால் சாட்சி சொல்ல முடியும்.

ஆய்வாளர் ராஜேஷ்கண்ணா என்பவர் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்.கே.ராமர் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றார். கைப்பற்றப்பட்ட சான்று பொருட்களை நீதிமன்றத்தில் வேண்டுகோள் கடிதம் பெற்று, திருநெல்வேலி இரசாயன பகுப்பாய்விற்கு அனுப்பி அறிக்கை பெற்று, அறிவியல் அலுவலக ஆய்வாளர் தனியா என்பவரை விசாரித்தார். அந்த அறிக்கை **அ.சா.ஆ.9** ஆகும்.

பின்னர், சாட்சிகளின் வாக்குமூலத்தின் அடிப்படையிலும், விசாரணையின் அடிப்படையிலும் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 294(பி), 324, 307, 506(2) வின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

புகார் வாக்குமூலத்தில் உள்ள திருத்தங்கள் எங்கு வைத்து, யாரால் செய்யப்பட்டது என்று என்னுடைய விசாரணையில் துலங்காது என்றால் சரிதான். புகார் வாக்குமுலம் கைப்பட உதவி ஆய்வாளர் வெள்ளத்துரை என்பவர் தான் எழுதனார். உதவி ஆய்வாளர் வெள்ளத்துரையுடன் காவலர்கள் மருத்துவமனைக்கு சென்றார்களா, என்று என்னுடைய விசாரணையில் துலங்கவில்லை. துணைக்கு சென்ற காவலர் தான் புகார் வாக்குமூலத்தை எழுதினார் என்பது விசாரணையில் துலங்காது என்றால் சரியல்ல. சம்பவயிடத்தில் இருந்தவர்களை நான் விசாரிக்கவில்லை என்றால் ேஹாட்டலில் வந்து போகும் நபர்களை நான் விசாரிக்கவில்லை. காயம்பட்ட நபர் சிகிச்சைக்கு வந்த ஆட்டோ பற்றி நான் விசாரிக்கவில்லை என்றால் அது போக்கு ஆட்டோ என்பதினால் விசாரிக்கவில்லை.

சம்பவம் நடந்து மறுநாள் அதிகாலை விசாரணை வழக்கு கோப்பு என்னிடம் வந்தது. புகார்தாரரின் வீட்டின் எந்த பக்கம் எதிரியின் வீடு உள்ளது என்றும், எவ்வளவு வீடுகள் தள்ளி உள்ளது என்றும் என்னுடைய விசாரணையில் துலங்காது என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்திலும், என்னுடைய விசாரணையிலும் புகார்தாரர் பைக்கை நிறுத்திய சமயத்திலேயே எதிரி பைக்கை மிதித்து தள்ளியபோது அந்த சமயத்தில் எதிரியிடம் கேட்டபோது சரியாக பதில் சொல்லாமல் சென்று விட்டார் என்று கூறியுள்ளார் என்றால் சரிதான். எதிரியின் ஒப்புதல்

வாக்குமூலத்தில் சம்பவம் நடந்த மறுநாள் தான் அ.சா.1 எதிரியிடம் பைக்கை மிதித்த சம்பவம் பற்றி கேட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். முன்விரோதம் சம்பந்தமாக நான் சம்பவ சாட்சிகளை வேறு சாட்சிகளை விசாரணை செய்யவில்லை. முன்விரோத சம்பவத்திற்கும், இந்த வழக்கு சம்பவத்திற்குமிடையில் எதிரிக்கும், அ.சா.1 க்கும் பிரச்சனை இருந்ததாக அ.சா.1 என்னிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. பார்க்கும்போதெல்லாம் எதிரி அ.சா.1 ஐ முறைத்ததாகவும், வாக்குவாதம் நடந்ததாகவும் சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் அறிவேன் சாட்சியாக குறிப்பிட்டுள்ள பாலகிருஷ்ணன் என்பவரை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

மாதிரி வரைபடத்தில் ரஹ்மத் புரோட்டா ஸ்டால் என்று கட்டம் போட்டு காட்டப்பட்டுள்ள இடத்தில் சம்பவயிடம் குறிப்பிடவில்லை என்றால் அருகில் குறிப்பிட்டுள்ளேன். அது ஒரே காம்பவுண்ட்டிற்குள் உள்ளது. சம்பவயிடம் என்று குறிப்பிட்டுள்ள இடத்தில் ரஹ்மத் புரோட்டா ஸ்டால் என்று நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கு கீழ்புறம் ரஹ்மத் ஹோட்டல் என்று உள்ளது என்றால் சரிதான். புகார்தாரர் எந்த ரஹ்மத் ஹோட்டலில் சாப்பிடும் போது பிரச்சனை ஏற்பட்டது என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. ரஹ்மத் புரோட்டா ஸ்டாலில் சம்பவம் நடந்ததாக கூறியுள்ளார். வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தியாகி வாஞ்சிநாதன் மணிமண்டபம் அங்கு இல்லை என்றால் சரியல்ல. இரவு 01.00 மணிக்கு ஹோட்டல்கள் திறந்திருக்க அனுமதியில்லை என்றால் சரியல்ல. குற்றால சீசன் நேரத்தில் அனுமதி வழங்கப்படும்.

டிசம்பர் மாதம் சீசன் இல்லை என்றால் சரியல்ல. அது கிறிஸ்துமஸ், நியூ இயர் சீசன் ஆகும். வரைபடத்தில் டேபிள், சேர் உடைந்து கிடந்ததாகவோ, அந்த இடத்தில் இரத்தக்கறை இருந்ததாகவோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ேஹாட்டலில் வைத்து எந்த சம்பவமும் நடைபெறாததினால் இரத்தக்கறை இல்லை என்றால் சரியல்ல. 2 முதல் 4 வரையிலான சாட்சிகள் எதிரியை எவ்வாறு அடையாளம் தெரியும் என்று என்னிடம் கூறவில்லை என்றால் புகார்தாரர் மூலமாக தெரிய வந்தது.

என்னுடைய வாக்குமூலத்தில் இது குறித்து சொல்லியுள்ளார்களா? என்றால் இல்லை. புகார்தாரருக்கு ேஹாட்டலில் யார் இலை போட்டு சாப்பாடு பரிமாறினார்கள் என்று என்னுடைய விசாரணையில் துலங்கவில்லை என்றால் சப்ளையர் பீர் முகமது சாப்பாடு பரிமாறியுள்ளார். பீர்முகமது என்ற நபரை நான் சாட்சி பட்டியலில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அவர் சம்பவ நாளில் இல்லை என்பதினால் நான் சாட்சி பட்டியலில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்தின்போது, உள்ளூர்க்காரர்கள் இருந்தார்களா? என்று நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

எதிரியின் போட்டோ, வயது, அங்க அடையாளம் குறித்து புகார்தாரர் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். ஆனால் அவர், எதிரி தனது உறவினர் என்று குறிப்பிட்டுள்ளார். எதிரி தான் புகாரில் குறிப்பிட்டுள்ள நபர் என்று எதன் அடிப்படையில் கைது செய்தேன் என்றால் சாட்சிகளின் வாக்குமூலங்களின் அடிப்படையில் கைது செய்தேன். அ.சா.1 ஐ தவிர மற்ற சாட்சிகளுக்கு எதிரியை தெரியாது என்றால் சரியல்ல.

எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் அவரது இடுப்பு சாரத்தில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து ஆஜர்படுத்தியதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அந்த கத்தியில் இரத்தக்கறை இருந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். இரத்தக்கறை படிந்த கத்தியை எதிரி ஆஜர் செய்தாரா என்றால் இல்லை. இரத்தக்கறை இல்லாத கத்தியை ஆஜர்படுத்தினார். படிவம் 91ல் காலம் 3ல் குறிப்பிட்டுள்ள கத்தி எதிரியிடமிருந்து கைப்பற்றிய கத்தி கிடையாது என்றால் சரியல்ல. கத்தியில் எதிரியின் கைரேகை இருந்ததாக எந்த ஆய்வுக்கும் அனுப்பவில்லை என்றால் சரிதான். பகுப்பாய்வு அலுவலரை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. சான்று பொருட்களை நாங்களே காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்தோம் என்றால் சரியல்ல. படிவம் 91 எதிரியே கைது செய்தபோது தயார் செய்யப்பட்டதா? என்றால் கத்தியை கைப்பற்றிய பின்பு படிவம் 91 தயார் செய்யப்பட்டது. கத்தி கைப்பற்றியது மற்றும் எதிரியை கைது செய்தது அரை மணிநேரத்திற்குள் நடந்தது என்றால் சரியல்ல. ஒரு மணி நேரம் ஆனது. எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்துவதற்கு முன்பே படிவம் 91 தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

எதிரியை 29.12.2022 அன்று தான் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன் என்றால் சரிதான். படிவம் 91ஆனது 20.12.2022 அன்று தான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரியை கைது செய்யும்போது கத்தி எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், படிவம் 91 தயார் செய்யப்படவில்லை என்றாலும் எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்படும்போது படிவம் 91 தாக்கல்

செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. கத்தியானது இந்த வழக்கிற்காக பின்யோசனையிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரி கத்தியை எங்கிருந்து வாங்கினார் என்று அந்த நபரை நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நாள், நேரத்தில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றாலும், அந்த இடத்தில் வைத்து எதிரியிடம் எந்த ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றாலும், ஆயுதம் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல.

இலஞ்சி சவுக்கு முக்கில் எப்போது போலீசார் பாதுகாப்பு போடப்பட்டிருக்கும் என்றால், அவ்வப்போது போலீசார் ரோந்து செய்வார்கள். வெளியூரில் இருந்து வரும் நபர்கள் அந்த இடத்தில் வாகனத்தை நிறுத்தி விட்டு பொருட்கள் வாங்குவார்கள் என்றால் சரிதான். புகார்தாரரை வேறு யாரோ இனம் தெரியாத நபருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டபோது, அந்த நபர் புகார்தாரரை தள்ளி விட்டு கீழே கிடந்த பீங்கான் பொருளில் விழுந்து காயம் ஏற்பட்டது என்றாலும், எதிரியுடன் இருந்த முன்விரோதத்தின் அடிப்படையில் எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்து, பொய் வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் முறையான விசாரணை செய்யாமல் எதிரி மீது ஒருதலைபட்சமான இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

எதிரி அவதூறான வார்த்தைகள் பேசியதினால் புகார்தாரருக்கு அவமானமோ, அருவருப்போ ஏற்பட்டதாகவோ, மிரட்டியதினால் உயிர் பயம் ஏற்பட்டதாகவோ அ.சா.1 என்னுடைய விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.21 19:44:13 +0530